அ.வ.எண்: 126/2016 நாள்: 27.03.2026

பி.வா.சா.1 – பாண்டி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. O.S.126/2016 வழக்கை வெள்ளைச்சாமி வகையறா என் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அந்த வழக்கின் தாவாசொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதன் பின்பு தான் நான் O.S.94/2018 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி O.S.94/2018 வழக்கு எந்த சொத்துக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சர்வே எண். 610/10 சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி சர்வே எண் 610/10–ற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால், பிரதிவாதி வெள்ளைச்சாமி பெயரில் உள்ளது. O.S.94/2018 வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளை நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தில் பிரதிவாதி வெள்ளைச்சாமி என்பவர் எவ்வளவு நீள,அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். 1.4 மீட்டர் அகலம் மற்றும் 20 மீட்டர் நீளத்திற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

2. மேற்படி ஆக்கிரமிப்பு செய்துள்ளது சம்பந்தமாக நான் ஆவணங்கள்

எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், மேற்படி சொத்து மற்றும் பாதையின் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த வரைபடத்தில் எத்தனை அடி நீளம், எத்தனை அடி அகலத்திற்கு பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் வரைபடத்தில் அது வராது. பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக வரைபடத்தை தவிர நான் வேறு ஏதும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. O.S.94/2018 வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து சர்வேயர் உதவியுடன் சொத்தை அளவீடு செய்தால் எவ்வளவு ஆக்கிரமிப்பு என்ற விவரம் தெரிய வரும் என்றால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பிறகு தான் நான் வழக்கை தாக்கல் செய்தேன். O.S.94/2018 வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. தாவா சொத்துக்களை தவிர நத்தம் சர்வேயின் போது வேறு ஏதேனும் சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் வழங்கப்பட்டது. எந்த சர்வே எண்ணுக்கு என் தந்தை பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. பூமிநாதன் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் எனது சித்தப்பா ஆவார். மேற்படி பூமிநாதனுக்கும் நத்தம் சர்வேயின் போது தாவா சொத்துக்களைத் தவிர வேறு சொத்துக்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோன்று விஸ்வநாதன் ,கைலாசநாதர் அம்பலம், கருப்பையா அம்பலம், மணியம்மை, துரைசிங்கம், கௌசல்யா, கருப்பையா அம்பலம் மகன் லக்ஷ்மணன் ஆகியோர்களுக்கும் தனித்தனியாக நத்தம் சர்வேயின் போது வெவ்வேறு சொத்துகளுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பட்டா வழங்கப்பட்ட

இடங்களில் மேற்படி நபர்கள் தனித்தனியாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நத்தம் சர்வேயின் போது சர்வே எண் 610/11 காலியிடமாக இருந்தது என்றால் சரியல்ல அதில் வண்டி கொட்டகை இருந்தது.

4. மேற்படி வண்டி கொட்டகைக்கு யார் பெயரில் வரி செலுத்தப்பட்டது என்றால், ஏழு நபர்கள் பெயரில் கூட்டாக பட்டா இருந்தது அதனால் அவர்கள் பெயரில்தான் வரி செலுத்தப்பட்டது. மேற்படி ஏழு நபர்களில் யார் வரி செலுத்தியது என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. மேற்படி வண்டி கொட்டகைக்கு நானோ எனது தகப்பனாரோ வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி வண்டி கொட்டகைக்கு வரி செலுத்திய வரி ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். O.S.126/2016 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வரை மேற்படி வண்டி கொட்டகை இருந்தது என்றால், வழக்கு தாக்கல் செய்யும் வரை இருந்தது. 2016 ஆம் ஆண்டு வரை மேற்படி வண்டி கொட்டகைக்கு 7 நபர்கள் பெயரிலும் கூட்டாக வரி செலுத்தி வந்தோமா என்றால் இல்லை. மேற்படி வழக்கில் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அந்த வழக்கு சொத்தை பார்வையிடும் போது அங்கு வண்டி கொட்டகை இல்லை என்றால் சரிதான்.

5. மேற்படி வண்டி கொட்டகை 2016 ஆம் ஆண்டு வரை இருந்தது என்பதை காட்டும் வகையில் எந்தவித ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 610/11 க்கு நேர் வடக்கே தான் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 610/9–E கருப்பையா மற்றும் நடேசன் ஆகியோரின் வீடு இருந்தது என்றால், முன்பு இருந்தது ஆனால் அதன் பின்பு அவர்கள் வேறு இடத்திற்கு சென்று விட்டதால் வீடு சேதமடைந்து விட்டது. அந்த வீடு

சேதமடைந்து சுமார் 20 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கலாம். சர்வே எண் 610/11 க்கு கிழக்கே தான் என்னுடைய பூர்வீக வீடு மற்றும் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 610/11 க்கு அருகில் என்னை தவிர மற்ற கூட்டு பட்டாதாரர்களுக்கு வீடு இல்லை என்றால் சரியல்ல உள்ளது. மற்ற கூட்டு பட்டாதாரர்களில் யாருடைய வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

6. 1 முதல் 5 பிரதிவாதிகளின் வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் எந்தவித பாதையும் இல்லை என்றால் சரிதான், வயல்தான் உள்ளது. அதேபோன்று மேற்கு பக்கமும் பாதை இல்லை என்றால் சரிதான். வெள்ளைச்சாமி, மோகன்தாஸ் மற்றும் பெரியசாமி ஆகியோரின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் பாதை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனைவருக்கும் O.S.126/2016–ன் வழக்கு சொத்தான சர்வே எண். 610/11–ல் அவரவர்கள் வீட்டிற்கு நேராக உள்ள இடத்தை அனுபவம் செய்தும், பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. O.S.126/2016 வழக்கில் வாதிகள் 5 பேருக்கும் தாவாசொத்திற்கு வடக்கே உள்ள இடத்தை தவிர நத்தம் சர்வே எண் போது வேறு இடங்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. நான் தற்சமயம் எங்கு இருந்து வருகிறேன் என்றால், திருச்சியில் அடகு கடை வைத்து தொழில் நடத்தி வருகிறேன். நான் எந்த ஆண்டு முதல் திருச்சியில் உள்ளேன் என்றால் 2003 ஆம் ஆண்டு முதல் திருச்சியில் உள்ளேன்.

7. அதனால் தாவா சொத்து உள்ள வெளிமுத்தி கிராமத்தில் நத்தம் சர்வேயின் போது யார் யாருக்கு எந்தெந்த இடத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். நத்தம் சர்வேயின் போது சர்வே எண்.610/9 –ல் 4,5 வாதிகளான

கருப்பையா மற்றும் நடேசன் ஆகியோருக்கு வீடு இருந்தது என்றால் இருக்கலாம் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. நான் எனது 19 வயது முதல் சென்னையில் உள்ள அசோக் லேலாண்ட் கம்பெனியில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். அதன் பின்பு திருச்சியில் அடகுகடை வைத்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் எங்கள் ஊரில் எந்தெந்த சொத்துக்களை யார் யார் அனுபவம் செய்து வந்தார்கள் என்ற விபரம் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். எனது குடும்பம் பங்காளிகள் அதிகம் உள்ள பெரிய குடும்பம் என்றால் சரிதான். எனது குடும்பத்தார்களுக்கு மொத்தமாக எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் சுமார் 10 ஏக்கருக்கு மேலாக நஞ்சை நிலங்களும் 10 ஏக்கருக்கு மேலாக புஞ்சை நிலங்களும் இருக்கலாம்.

8. என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் O.S.126/2016 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் என்றால் சரிதான். அதில் உள்ள சர்வேயர் வரைபடத்தில் சர்வே எண் 610/9–ல் வீடு இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 610/11 களத்து மேடாக இருந்தது என்றால் எனக்கு தெரிந்தவரையில் இல்லை. நத்தம் சர்வே எண் போது சர்வே 610/11 காலி இடமாகத்தான் இருந்தது என்றும், சர்வே எண் 610/9 –ல் தான் வீடுகள் இருந்தது என்றும், நான் எனது பங்காளிகளின் செல்வாக்கை வைத்து அதில் உள்ள வீடுகளை காட்டாமல் சர்வே எண்.610/11–ல் வீடு இருப்பது போல் காட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. நத்தம் சர்வேயின் போது எனக்கும் எனது பங்காளிகளுக்கும் வீடு கட்டுவதற்காக பட்டா வழங்கப்பட்ட போதும் வாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நாங்கள் கூட்டு பட்டா உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

9. நானும் எனது பங்காளிகளும் மேற்படி தாவா சொத்தில் வீடு கட்டி கூட்டு குடும்பமாக வசித்து வரவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை அளவீடு செய்யும் பொழுது சர்வே எண். 610/11 க்கு கிழக்கே உள்ள பாதையை அளக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த சர்வே எண்ணை அளப்பதற்காக நீதிமன்ற ஆணையாளர் நியமிக்க மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சர்வே எண் 610/11–ஐ அளப்பதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.27 16:13:18 +0530